திருமதி மனோரஞ்சிதம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடுப்பணை கட்டித் தர ஆவன செய்வதாக தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் *114*, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

114—

கால்நடைக் கிளை நிலையம்

***11725—திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியம், நாகம்மநாயக்கன்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியம், நாகம்மநாயக்கன்பட்டியைச் சேர்ந்த கிராமத்திலே கால்நடை பராமரிப்புத் துறையின் விதிகளுக்குட்பட்டு, *3,000* கால்நடைகளுக்கு மேல் இருப்பதால், அங்கே ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதுமில்லை' என்ற அப்பர் பெருமானின் பொன்மொழிக்கேற்ப, எதற்கும் அஞ்சாமை, நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட

2013 ஏப்ரல் 1]

பார்வையோடு, எதிர்கால சமுதாயம் ஏற்றம் பெற, அனைத்துத் துறைகளிலும் தமிழகம் முன்னிலை பெற, ஓய்வின்றி, உறக்கமின்றி உழைக்கும் நாளைய இந்தியாவின் விடியல் மாண்புமிகு அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) பொற்பாதம் பணிந்து வணங்கி, ஏழையெளிய தாய்மார்களுக்கு விலையில்லா ஆடுகள், கறவை மாடுகளை வழங்கி, அவற்றைப் பராமரிப்பதற்காக துறையூர் தொகுதிக்குட்பட்ட நாகம்மநாயக்கன்பட்டியில், கால்நடைக் கிளை நிலையம் அமைத்துக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

115—

ஜவுளிப் பூங்கா

***17435—திரு. ஆர்.பி. உதயகுமார்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தூர் தொகுதி, ராஜபாளையம் ஒன்றியத்தில ஜவுளிப் பூங்கா அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சாத்தூர் தொகுதி, ராஜபாளையம் ஒன்றியத்தில் கைத்தறி ஜவுளிப் பூங்கா அமைக்க தற்போது அரசிடம் செயற்குறிப்பு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.